தோற்றம் : 1971

அறிந்தேற்பு : 341/1980

# தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழகம்

**(Recognized by the Govt. of Tamilnadu G.O.No. 341, Dt. 22-03-1980)**

**TAMILNADU GOVERNMENT COLLEGIATE TEACHERS' ASSOCIATION**

TNGCTA

பேரா. நரசிங்கம் நிலையம், 2, சைடோஜி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-600 005. **Ph : 28516573, Telefax : 28414354**

**முனைவர் த. வீரமணி**
தலைவர்

**முனைவர் இரா. தாமோதரன்**
பொதுச்செயலர்

**முனைவர். ஆ. கோபாலகிருஷ்ணன்**
பொருளர்

**முனைவர் க. இரமேஷ்**
துணைத்தலைவர் (பொது)

**பேரா சோ. சுரேஷ்**
இணைச்செயலர் (பொது)

**முனைவர் உ. சிவப்பிரியா**
துணைத்தலைவர் (மகளிர்)

**பேரா. த. மதுரம்**
இணைச்செயலர் (மகளிர்)

சுற்றறிக்கை எண். 01/2018 நாள் : 09.03.2018

**அன்பிற்கினிய தோழர்களே! தோழியரே! வணக்கம்**

நமது தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழகமானது, அறிவாற்றலும் செயல்திறனும் மிக்க உறுப்பினர்களையும், தன்னலமில்லாப் பொதுநலத்தோடு உறுப்பினர்களின் எண்ணவோட்டத்தைப் புரிந்து, அவர்களின் உணர்வுகளின் ஒட்டுமொத்தப் பிரதிபலிப்பாக செயலாற்றும் தலைமையையும் கொண்டதொரு பேரியக்கம் என்பதனை நிருபிக்கும் வகையில் நமது கழக உறுப்பினர்களும், பொறுப்பாளர்களும் தொடர்ந்து செயலாற்றிவருவது பாராட்டுதலுக்குரியது. இத்தகு சிறப்புமிக்கதொரு கழகத்தின் நோக்கங்களுக்காகவும், நலனுக்காகவும், கழகத் தலைமை அர்ப்பணிப்புணர்வோடு தொடர்ந்து உழைத்துக்கொண்டிருக்கிறது.

தொடர்ச்சியான இயக்கப் பணிகளின் காரணமாக, சுற்றறிக்கை காலதாமதமாக உங்களின் பார்வைக்கு வந்தடைந்ததை கழக உறுப்பினர்கள் பொறுத்து ஏற்றுக் கொள்வீர்கள் என நம்புகிறேன்.

நமது கழகத்தின் மாநிலத் தேர்தல் டிசம்பர் 10, 2017 அன்று நடந்து முடிந்த சில நாட்களுக்குள் நடைபெற்ற அய்பெக்டோ போராட்டம், ஜே.ஏ.சி. போராட்டம், ஜேக்டோ - ஜியோ போராட்டம் என அனைத்துப் போராட்டங்களையும் மிகவும் வெற்றிகரமான முறையில் மண்டல, கிளை அளவில் ஒருங்கிணைத்த பொறுப்பாளர்களுக்கும் அதிக அளவில் உற்சாகத்தோடு கலந்து கொண்ட உறுப்பினர்களுக்கும் மாநில ஆட்சிக்குழுவின் சார்பாக வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். நமது நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றாமல் காலதாமதப்படுத்தும் அரசு அதிகாரிகளின் மீது நமக்கு ஏற்படும் அறச்சீற்றங்களே போராட்டங்களையும், போராட்ட வடிவங்களையும் தீர்மானிக்கின்றன. இத்தகைய போராட்டங்களை ஒருங்கிணைக்கும், வழி நடத்தும், கலந்து கொள்ளும் உணர்வுமிக்க செயல்பாடுகளே தலைமைப் பண்புகளை உறுப்பினர்களிடையே உருவாக்குகின்றன. ஆம், போராட்டங்களே சிறந்த தலைவர்களை உருவாக்கவும், அடையாளம் காணவும் செய்கின்றன.

இப்போராட்டங்களின் மூலமாக நமது இயக்கத்தில் சிறந்த தலைமைப் பண்புகளோடு கூடிய தலைவர்கள் உருவாகி வருவது, இயக்கத்தின் நீண்ட கால, சிறப்பான மேம்பாட்டிற்கு அடித்தளமாகும் என்பதில் மட்டற்ற மகிழ்ச்சியே!

**மாநிலத் தேர்தல்**

திருச்சி ஜமால் முகம்மது கல்லூரியில் 10-12-2017 அன்று மாநில ஆட்சிக் குழுவிற்கான தேர்தல் நடைபெற்றது. இதில் 93% சதவீதமான மாநில பொதுக்குழு உறுப்பினர்கள் நேரில் வந்து வாக்களித்து தங்களது சனநாயக கடமையினை நிறைவேற்றினர். வாக்கு எண்ணிக்கை முடிவுற்ற பின் தேர்தல் குழுவினரால், தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின்னர் நடைபெற்ற பொதுக்குழுவில் இன்றைய மாநில ஆட்சிக்குழு பொறுப்பாளர்கள் பதவியேற்றுக் கொண்டனர். தொடர்ந்து நடைபெற்ற பொதுக்குழுக் கூட்டத்தில்

1. மாநிலத் தேர்தலை சிறப்பாக நடத்திக் கொடுத்த தேர்தல் குழுவின் அமைப்பாளர் **முனைவர் வி. நடராஜன்** அவர்களுக்கும் உறுப்பினர்கள் **முனைவர் ச. தண்டபாணி** மற்றும் **முனைவர் இரா. இராவணன்** அவர்களுக்கும் நன்றி தெரிவித்தும்
2. கடந்த காலத்தில் சிறப்பாக பணியாற்றிய மாநில ஆட்சிக்குழுவிற்கு நன்றி தெரிவித்தும்,

3. புதிதாக தேர்ந்தொடுக்கப்பட்ட மாநில பொறுப்பாளர்களுக்கு வாழ்த்து தெரிவித்தும்,

4. முனைவர். **இரா. சந்திரன்** (மேலூர்) அவர்களை அமைப்பாளராகவும், **முனைவர். ரெ. கோவிந்தராஜ்** (தஞ்சை) மற்றும் முனைவர் **ஜோ. சார்லஸ், செல்வராஜ்** (முசிறி) ஆகியோர்களை உறுப்பினர்களாகவும் கொண்டு தேர்தல் மேல் முறையீட்டுக்குழுவினை அமைப்பதென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**மாநில ஆட்சிக்குழுக் கூட்டம்**

கடந்த 15.12.2017, 03.01.2018, 25.01.2018 மற்றும் 13.3.2018 ஆகிய நாட்களில் மாநில ஆட்சிக்குழுக் கூட்டம் நடைபெற்றது. இதில் ஜே.ஏ.சி. போராட்டங்கள் மற்றும் ஜேக்டோ - ஜியோ போராட்டங்களை நமது இயக்கத்தின் சார்பாக சிறப்பாக நடத்துவது குறித்தும் அதிகாரிகளிடம் நமது கோரிக்கைகளை எடுத்துச் செல்வது குறித்தும் விவாதிக்கப்பட்டது. ஆட்சிக்குழுக் கூட்டங்கள் நடைபெற்ற நாட்களிலேயே உறுப்பினர்களின் தனிப்பட்ட கோப்புகள் மீதான நடவடிக்கைகளின் காலதாமதம் குறித்தும், நிலுவையிலுள்ள பொதுவான கோரிக்கைகள் குறித்தும் அரசு அதிகாரிகளிடமும் விவாதிக்கப்பட்டது. நிலுவையில் உள்ள உறுப்பினர்களின் தனிப்பட்ட கோப்புகளின் மீது உரிய நடவடிக்கைகள் எடுப்பதாக அதிகாரிகள் தரப்பிலிருந்து பொறுப்பாளர்களுக்கு உறுதியளிக்கப்பட்டது.

**ஜே.ஏ.சி. கூட்டம் மற்றும் போராட்டங்கள்**

கல்லூரி ஆசிரியர்களின் கூட்டு நடவடிக்கைக்குழு (ஜே.ஏ.சி.) கூட்டமானது கடந்த 26.01.2018 அன்று ஏ.யு.டி. அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் 2017 - 2019 ஆண்டுகளுக்குரிய புதிய பொறுப்பாளர்கள் தேரந்தெடுக்கப்பட்டனர். நமது இயக்கத்தின் பொதுச்செயலர் முனைவர் இரா. தாமோதரன் அவர்கள் அமைப்பாளராகவும், மூட்டா பொதுச்செயலாளர் பேரா. நாகராஜன் அவர்கள் செயலாளராகவும், ஏ.யு.டி. மாநிலப் பொருளாளர் பேரா. செந்தில் அவர்கள் பொருளாளராகவும் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தொடர்ந்து நடைபெற்ற கூட்டத்தில், நிலுவையில் உள்ள கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் அரசின் பாராமுகத்தைக் கண்டித்து, 02.02.2015 அன்று முதலமைச்சர், உயர்கல்வித்துறை அமைச்சர், உயர்கல்வித்துறைச் செயலர், கல்லூரிக் கல்வி இயக்குனர் ஆகியோருக்கு கிளைகளின் மூலமாக உறுப்பினர்கள கையொப்பமிட்டக் கடிதங்கள் அனுப்புவதென்றும், 06.02.2018 அன்று கல்லூரிக்கல்வி இணை இயக்குநர் அலுவலகங்கள் முன்பு மாலை நேர ஆர்ப்பாட்டம் நடத்துவது என்றும், 15.02.2018 அன்று உறுப்பினர்கள் பெருந்திரளாக நேரில் வந்து இயக்குனரிடம் தங்களது கோரிக்கை மனுவினைக் கொடுப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

மேற்கண்ட அனைத்துப் போராட்டங்களும் மிகவும் எழுச்சியோடு நடைபெற்று முடிந்துள்ளது. 15.02.2018, அன்று இயக்குனரிடம் பெருந்திரள் கோரிக்கை மனு கொடுக்கும் நிகழ்வு நிறைவுற்ற பின்னர் உயர்கல்வித் துறைச் செயலர், ஜே.ஏ.சி. பொறுப்பாளர்களை பேச்சுவார்த்தைக்கு அழைத்து, கோரிக்கைகள் குறித்து விவாதித்ததில் பணிமேம்பாடு, மூத்தோரை விட இளையோர் அதிக ஊதியம் பெறும் முரண்பாட்டினை களைதல், 6000 - 70.00 பணிமேம்பாட்டிற்கான நிலுவைத் தொகை வழங்குதல் குறித்து பொருத்தமான முடிவுகள் 15 நாட்கள் தெரிவிப்பதாக அறிவித்ததோடு, 7-வது யு.ஜி.சி. ஊதியக்குழு பரிந்துரைகளை அமல்படுத்துவதற்கான வேலைகள் துவங்கியுள்ளதாகவும், தகுதிபெற்ற பேராசிரியர்களுக்கான முழுத்தகுதி சான்றிதழ் மற்றும் தகுதிகாண் பருவ நிறைவு ஆணைகள் வரைந்து வழங்க நடவடிக்கை எடுப்பதாவும் கூறினார்.

பேச்சுவார்த்தைக்கு பின் நடைபெற்ற ஜே.ஏ.சி. செயற்குழுக் கூட்டத்தில், உயர்கல்வித்துறைச் செயலர் உறுதியளித்த நாட்களுக்குள் கோரிக்கைகளில் முன்னேற்றம் இல்லாத பட்சத்தில் மார்ச் 6, 7, 8 ஆகிய நாட்களில் சென்னையில் தொடர் மறியலில் ஈடுபடுவது எனத் தீர்மானிக்கப்பட்டது. மேலும், உயர்கல்வியின் ஊழல் குறித்து 01.04.2018 அன்று ஒரு சிறப்பு கருத்தரங்கினை JAC, AIFUCTO, TANFUFA சார்பாக நடத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. எனினும், 02.03.2018 அன்று நடநடத உயர்கல்வித்துறைச் செயலருடனான சந்திப்பின்போது கொடுக்கப்பட்ட உத்திரவாதத்தின் பேரிலும், பருவத் தேர்வுகள் நெருங்கிவிட்ட நிலையில் மாணவர்களின் கல்வி நலன் கருதியும், மேற்குறிப்பிட்ட தொடர் மறியல் போராட்டம் தற்காலிகமாக ஒத்திவைப்பது என ஜே.ஏ.சி. முடிவெடுத்தது.

**ஜேக்டோ - ஜியோ போராட்டங்கள்**

ஜேக்டோ - ஜியோவின் உயர் மட்டக்குழுவின் முடிவின்படி 06.01.2018 அன்று மாவட்டத் தலைநகரங்களில் காலை 10 மணி முதல் 1.00 மணி வரை ஆர்ப்பாட்டம் நடத்துவதென்றும், 11.02.2018 அன்று மண்டல அளவில் ஆயத்த மாநாடுகள் நடத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டது. மேற்கண்ட நிகழ்வுகளில் நம்முடைய உறுப்பினர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர். மேலும் புதிய பென்சன் திட்டத்தை இரத்து செய்வது குறித்து முடிவெடுக்கப்பட்ட குழுவிற்கு தொடர்ச்சியாக கால நீடிப்பு வழங்கி வருவதைக் கண்டித்தும், புதிய பென்சன் திட்டத்தை இரத்து செய்யிதல்

மற்றும் 7வது ஊதியக்குழுவில் உள்ள முரண்பாடுகளை களைந்திடுதல் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்திம், 21.02.2018 முதல் தொடர் மறியலில் ஈடுபடுவது எனவும் முடிவெடுக்கப்பட்டது. நம்முடைய இயக்கத்தின் சார்பாக ஒவ்வொரு மண்டலமும் ஒவ்வொரு நாள் கலந்து கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில், 21.02.2018 அன்று சென்னை மண்டலம், 22.02.2018 அன்று கடலூர் மண்டலம், 23.02.2018 அன்று வேலூர் மண்டலம் என நமது உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். 24.02.2018 அன்று மகளிர் தலைமையில் மறியலில் ஈடுபடுவது என ஜேக்டோ - ஜியோ முடிவெடுத்ததன் பொருட்டு, நம்முடைய இயக்கத்தின் சார்பாக மாநில இணைச்செயலர் (மகளிர்) பேரா. து. மதுரம் அவர்கள் மறியலுக்கு தலைமை ஏற்றார். தொடர்ச்சியாக நான்கு நாள் மறியலில் கலந்து கொண்டும் பேச்சுவார்த்தைக்கு அழைக்காத அரசின் அலட்சியத்தை கண்டித்தும், உடனடியாக அரசு பேச்சு வார்த்தைக்கு அழைக்க வேண்டுமெனவும் மறியலின் போது கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

பாரதப்பிரதமரின் சென்னை வருகையைக் காரணம் காட்டிப் பேச்சு வார்த்தை ஏற்பாட்டிற்கு மறுத்த காவல் துறை அதிகாரிகள், மறியலை கைவிடக் கோரினர். இதன் காரணமாக, மறியல் தடையை மீறி முதல்வரை சந்திக்கும் பேரணியாக மாறியபோது அனைவரும் கைது செய்யப்பட்டு, மாலை விடுவிக்கப்பட்டனர்.

பின்னர் கூடிய ஜேக்டோ - ஜியோ உயர்மட்டக்குழு கூட்டத்தில், தொடர் மறியல் போராட்டத்தை முடித்துக்கொள்வது எனவும், நமது கோரிக்கைகளை வலியுறுத்தி 24.03.2018 அன்று மாவட்டத் தலைநகரங்களில் பேரணி நடத்துவதென்றும், 08.02.2018 அன்று சென்னையில் கோட்டையை நோக்கி பேரணி நடத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டது. எனினும், பிற மண்டலங்களிலிருந்து நமது தோழர்கள் மறியலுக்கு தயாரான நிலையில் மறியல் கைவிடப்பட்டது வருத்தமே!

**உயர்மட்டக்குழுக் கூட்டம்**

கடந்த 15.02.2018 அன்று உறுப்பினர்கள் இயக்குனரை நேரில் சந்தித்து மனு கொடுக்க வேண்டுவது என ஜே.ஏ.சி. முடிவு செய்த நிலையில், கிளை / மண்டலப் பொறுப்பாளர்களில் பலர் இந்நிகழ்வு குறித்து தேவையான அறிவுறுத்தல்களை வழங்க வேண்டும் என மாநில ஆட்சிக்குழுவை கேட்டுக் கொண்டதற்கிணங்க, 11.02.2018 அன்று அவசர உயர் மட்டக்குழுக் கூட்டம் திருச்சியில் நடைபெற்றது. இதில் அனைத்து உறுப்பினர்களும் 15.02.2018 அன்று தற்செயல் விடுப்பு எடுத்து போராட்டத்தில் கலந்து கொள்வது என்றும், ஹார்வேர்டு பல்கலைகழகத்தின் தமிழ் இருக்கைக்கு ரூ 1,00,000/- (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) நமது இயக்கத்தின் சார்பாக நன்கொடை வழங்குவது எனவும், அண்ணாமலை பல்கலைக்கழக உபரி ஆசிரியர்களை திருப்பி அனுப்புவது குறித்து நீதிமன்றத்திற்கு செல்வதென்றும் முடிவு செய்யப்பட்டது. 19.02.2018 அன்று தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மாண்புமிகு மா·பா கே. பாண்டியராஜன் அவர்களிடம் ரூபாய் ஒரு இலட்சத்திற்கான காசோலையை பொதுச்செயலர் வழங்கினார்.

**UGC மற்றும் AIFUCTO செய்திகள்**

02.11.2017 அன்று மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சகம் கல்லூரி, பல்கலைக்கழக ஆசிரியர்களின் ஊதிய விகிதம் குறித்து ஆணை வெளியிட்டதைத் தொடர்ந்து ஊதிய நிர்ணயக் குழுவின் பரிந்துரைகளை வெளியிட வலியுறுத்தியும், மனித வள மேம்பாட்டுத்துறையின் ஆசிரியர்கள் விரோத ஆணையினை கண்டித்தும் 12.12.2017 அன்று அனைத்து பல்கலைக்கழகங்கள் முன்பும் மாலை நேர ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. டிசம்பர் 18 முதல் 20 வரை சீரடியில் நடைபெற்ற அய்பெக்டோ மாநாட்டில் நம்முடைய இயக்கத்தின் சார்பாக கலந்து கொண்ட 450-க்கு மேற்பட்ட உறுப்பினர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம். இதில் விரிவான விவாதங்கள் மேற்கொள்ளப்பட்டு உரிய காலத்தில் போராட்ட அறிவிப்புகள் அறிவிக்கப்படுமென முடிவு செய்யப்பட்டது.

மத்திய அரசு யு.ஜி.சி. ஊதிய நிர்ணயக்குழுவின் அறிக்கையை வெளியிடாததைத் தொடர்ந்து, அவ்வறிக்கை தகவல் அறியும் உரிமைச் சட்ட ஆர்வலர் மூலமாக பெறப்பட்டது. 31.01.2018 அன்று மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சகம், கல்லூரி, பல்கலைக் கழக ஆசிரியர்களுக்கு புதிய ஊதிய விகிதத்தை அமல்படுத்துவது குறித்து மாநில அரசுகளுக்கு கடிதம் அனுப்பியுள்ளது.

09.02.2018 அன்று யுஜிசி ஊதியம் மற்றும் பணி மேம்பாடு பெறுவது குறித்த நெறிமுறைகள் நகலினை (Draft regulation) இணையத்தளத்தில் வெளியிட்டு, அனைவரிடமிருந்து கருத்துக்களை கேட்டுள்ளது. பிப்ரவரி 10, 11 ஆகிய தேதிகளில் புதுதில்லியில் நடைபெற்ற அய்பெக்டோ நிர்வாகிகள் கூட்டத்தில் மார்ச் 12, 2018 அன்று தேசியச் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும், கல்லூரி, பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு எதிரான மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறையின் ஆணைகள் மற்றும் யுஜிசி-யின் பரிந்துரைகளை கண்டித்து பெருந்திரள் மனு கொடுப்பது எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் 11.02.2018 அன்று யுஜிசி சேர்மனை சந்தித்த அய்பெக்டோ தலைவர்கள், ஆசிரியர்கள் பணி மேம்பாடு குறித்து நெறிமுறை நகலில் தெரிவித்துள்ள கருத்துக்களுக்கு அதிருப்தி தெரிவித்துள்ளனர். வரன்முறை ஆணை வெளியிடுவதற்கு முன்னதாக அய்பெக்டோ தலைவர்களை கலந்தாலோசிப்பதாக யுஜிசி சேர்மன் தெரிவித்துள்ளார்.

**அய்பெக்டோ பொறுப்பாளர்**

டிசம்பர் 20, 2017 இல் புதுதில்லியில் நடைபெற்ற அய்பெக்டோ தேசிய பொறுப்பாளர்களுக்கான தேர்தலில் நமது இயக்கத்தின் சார்பாக கிருஷ்ணகிரி ஆடவர் கல்லூரியின் தாவரவியல் துறை இணைப்பேராசிரியர் முனைவர். வே. இரவி அவர்கள் அய்பெக்டோ துணைத்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அவரின் இயக்கப்பணி சிறக்க ஆட்சிக்குழு சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் மூட்டாவின் தலைவர். பேரா. சுப்பாராஜூ தேசியச் செயலாளராகவும் ஏ.யு.டி. தலைவர் பேரா. காந்திராஜ் துணைத்தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டமைக்கும் உறுப்பினர்கள் சார்பாக மாநில ஆட்சிக்குழுவின் வாழ்த்துக்கள்!

**வாழ்த்துச் செய்திகள்**

பாரதிதாசன் பல்கலைக்கழக ஆட்சிக் குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள புதுக்கோட்டை மாமன்னர் கல்லூரியின் கிளைத்தலைவர் பேரா. நாகேஸ்வரன் அவர்களுக்கும் கடலூர் மண்டலத்திலிருந்து ஜே.ஏ.சி. பொதுக் குழுவிற்கு தேர்வு செய்யப்பட்டுள்ள பேரா. திலக் அவர்களுக்கும், வேலூர் மண்டலத்திலிருந்து தேர்வு செய்யப்பட்டுள்ள பேரா. விக்னேஸ்வரன் அவர்களுக்கும் மாநில ஆட்சிக்குழுவின் சார்பாக வாழ்த்துக்கள்.

**இரங்கல் செய்தி**

நமது கழகத்தின் உறுப்பினர்கள்

- முனைவர் **கி. முத்துராமன்,** உதவிப்பேராசிரியர், வரலாற்றுத் துறை, அரசு கலைக் கல்லூரி, திண்டிவனம்
- பேரா. **மு. குமாரசாமி,** உதவிப் பேராசிரியர் - துறைத் தலைவர், வரலாற்றுத் துறை, அரசு கலைக் கல்லூரி, திருத்தணி
- முனைவர் **ஜா. அம்ரோசியா,** உதவிப்பேராசிரியர், வரலாற்றுத் துறை, மீனாட்சி அரசு மகளிர கல்லூரி, மதுரை
- முனைவர் **ஆசைத்தம்பி,** உதவிப்பேராசிரியர், ஆங்கிலத்துறை, மாநிலக் கல்லூரி, சென்னை
- முனைவர் **வி. மணிவண்ணன்,** உதவிப் பேராசிரியர், விலங்கியல் துறை, அரசு கலைக்கல்லூரி, நந்தனம், சென்னை

ஆகியோர் கடந்த இரண்டு மாதங்களில் உடல் நலக்குறைவாலும், பிற காரணங்களாலும் இயற்கை எய்தினர் என்பதனை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம். நமது கழகத்தின் உறுப்பினர்கள் மற்றும் அனைத்துப் பொறுப்பாளர்கள் சார்பாக அவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**மண்டல மற்றும் கிளைச் செயலர்கள் கவனத்திற்கு**

1. 2017-18 மற்றும் 2018-19 ஆண்டுகளுக்குரிய சந்தா தொகையினை மாநிலத்திற்கு அனுப்பி வைக்குமாறு வேண்டுகிறோம்.
2. அனைத்து மண்டலங்களிலும் மண்டல பயிற்சி முகாம் நடத்த உரிய ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு மண்டலச் செயலர்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

**மாநில செயற்குழுக் கூட்டம்**

**நாள்** : 31.03.2018

**இடம்** : அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சிவகாசி, விருதுநகர் மாவட்டம்.

**கருது பொருள் :**

1. நிலுவையிலுள்ள கோரிக்கைகள்
2. ஏழாவது ஊதியக்குழுப் பரிந்துரைகள் மற்றும் நெறிமுறைகள்
3. கௌரவ விரிவுரையாளர் நியமனங்கள்
4. மாற்றுப்பணியில் பணியிட மாறுதல்கள்
5. ஜேக்டோ - ஜியோ போராட்டம்
6. பிற.

**"பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்**
**அருமை உடைய செயல்."** **- குறள் 975**

*ஒன்று படுவோம்!* *போராடுவோம்!* *வெற்றிபெறுவோம்!*

பொதுச்செயலர்